நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 08 ம் நாள் திங்கள்கிழமை
<u>குற்றவியல் பல்வகை மனு.154/2026</u>

G.அசோக்குமார்,
த/பெ.கணபதித் தேவர், .... மனுதாரர் / புகார்தார்

- எதிர்-

1. ஜெயமாதா,
க/பெ.அசோக்குமார்,

2.ஜீவானந்தம்,
த/பெ.இராமர்,

3.பாலு (எ) பாலசுப்பிரமணியன்,
த/பெ.இராமர்,

4.ஆஸ்பின்ஜேக், ...எதிரிகள்

5. அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,
திருவில்லிபுத்தூர். .... குற்றமுறையீட்டாளர்

இம்மனு கடந்த 13.02.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 08.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றிறந்த வழக்கறிஞர் திரு.K.ஈஸ்வரன், அவர்கள் ஆஜராகியும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று 08.06.2026 ம் தேதி இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## <u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில் பிரிவு 175(3) BNSS ன் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உரிய விசாரணை மேற்கொள்ள, திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய ஆய்வாளருக்கு உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. அரசு தரப்பு மனுவின் சுருக்கம்–**

(i) இவ்வழக்கின் வாதியான அசோக்குமார் இராஜபாளையம் தாலுகா கீழராஜகுலராமன் அக்ரஹாரம் தெருவில் வாதியும் தனது மகள் குருவர்ஷிதாவும் குடியிருந்து வருவதாகவும், இவ்வழக்கின் 2வது எதிரி ஜீவானந்தமும், 3வது எதிரியும் தங்களது உடன்பிறந்த அக்காவான 1வது எதிரி ஜெயமாதவிற்கும் வாதிக்கும் இடையே உள்ள குடும்ப பிரச்சினை சம்மந்தமாக HMOP.84/2022 விசாரணைக்கு சம்பவ நாளான 23.02.2023ம் தேதி வாதியின் மனைவிக்கம் வாதிக்கும் திருவில்லிபுத்தூர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சமரச மையத்தில் சமாதான பேச்சு வார்த்தைக்காக மனு செய்து மேற்படி சமரச மையத்தில் இருவருக்குமிடையே சமரசம் ஏற்படாததால் சமரச தீர்வு மைத்தைவிட்டு வாதியும் வழக்கின் 1வது எதிரியும் வெளியே சென்றுள்ளார்கள் என்றும், அப்போது கேண்டீன் செல்வதற்காக ரவுண்டான அருகில் நடந்து சென்ற போது வாதியின் மைத்துனர்களான ஜீவானந்தமும், பாலு (எ) பாலுசுப்பிரமணியும் வாதியைப் பார்த்து எங்க அக்காவின் வாழ்கையை பாழாக்கிவிட்டு சம்பாதித்த சொத்துக்களையும் அபகரித்து வைத்துக் கொண்டு ஏன் எங்களை கோர்ட்டு கேஸீன்னு அலையவிடுறாட கூதி மகனே என்று அசிங்கமாக பேசி மிரட்டியுள்ளார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

**2.புகார்தாரர் தரப்பு ஆட்சேபணை மனுவின் சுருக்கம்**

(i) புகார்தாரருக்கும் 1-ம் எதிரிக்கும் கடந்த 20.02.2011-ம் தேதி திருமணம் நடைபெற்று ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் குழந்தைகள் உள்ளது என்றும், மேற்படி பெண் குழந்தை புகார்தாரரின் பராமரிப்பில் வளர்த்தும் படித்தும் வருவதாகவும், புகார்தாரரும் 1-ம் எதிரியும் திருப்பத்தூரில் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்துவந்த சமயத்தில் ஷயார்களுக்கிடையே குடும்ப பிரச்சனை ஏற்பட்டு புகார்தாரரையும் அவரது குழந்தை குருவாஷிதா வையும் சேத்தூரைச் சேர்ந்த 1-ம் எதிரிக்கு பழக்கமான 4-ம் எதிரி ஏற்பாடு செய்த ரௌடிகள் துணையுடன் கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என்றும், ஏற்கனவே 10.07.2021-ம் தேதி 1-ம் எதிரியின் சகோதரர்களான 2, 3 எதிரிகள் மற்றும் 4-ம் எதிரி ஏற்பாடு செய்த ரௌடிகள் வந்து புகார்தாரரை கம்பு, கத்தியால் தாக்கி கொடுங்காயங்கள் ஏற்படுத்தினர் என்றும், அதன்காரணமாக புகார்தாரர் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை

பெற்றுக்கொண்டு பின்னர் 11,07,2021-ம் தேதி திருப்பத்தூர் நகர் காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தார் என்றும், மேற்படி புகார் மனுவிற்கு மனு எண்.354/2021-ல் மனு ரசீது கொடுக்கப்பட்டு, 1-ம் எதிரியான புகார்தாரரின் மனைவி அப்பொழுது திருப்பத்தூர் ஸ்டேட் பேங்கில் வேலை பார்த்து வந்ததால் அவர் மீதும் அவரது சகோதரர்களான 2, 3 எதிரிகள் மற்றும் ரௌடிகள் மீதும் காவல்துறையால் எவ்வித சட்டப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் புகார்தாரர் அவர்கள் மீது மேல்நடவடிக்கை எடுக்கும்படி பல்வேறு உயர் அதிகாரிகளுக்கு புகார் மனு அனுப்பினார் புகார்தாரரின் ஷ சட்டப்படியான நடவடிக்கையை மனதில்கொண்டு புகார்தாரரை எப்படியாவது கொலை செய்துவிட்டு, வேறு திருமணம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் 1-ம் எதிரி, அவரது சகோதரர்களான 2, 3 எதிரிகள் மற்றும் 1-ம் எதிரியின் நண்பரும் வழக்கறிஞருமான 4-ம் எதிரி ஆகியோர் புகார்தாரரை அடிக்கடி செல்போனில் மிரட்டி வந்தனர்.

(ii) இந்நிலையில் புகார்தாரரின் மனைவி ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் புகார்தாரர் மீது விவாகரத்து பரிகாரம் கோரி H.M.O.P.No.84/2022 என்ற வழக்கைத் தாக்கல் செய்ததாகவும், புகார்தாரர் தனக்கும் தனது மகளுக்கும் 1-ம் எதிரியிடமிருந்து ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்த மனுவில் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டட உத்தரவின் அடிப்படையில் 1-ம் எதிரி ஜீவனாம்சத் தொகை செலுத்தாத காரணத்தினால் விவாகரத்து கோரி 1-ம் எதிரி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.

(iii) புகார்தாரா கடந்த 17.07.2023-ம் தேதி விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் மேல்நடவடிக்கை கோரி புகார் மனு அனுப்பிய நிலையில் மேற்படி எதிரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் எதிரிகள் கடந்த 12.10.2023-ம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு விவாகரத்து மனுவின் மீதான வாய்தாவிற்கு ஆஜராக வந்தபோது 1-ம் எதிரி தன்னுடன் வந்திருந்த 4-ம் எதிரியிடமும், 2-ம் எதிரி ஜீவானந்தத்திடமும்" இவன் ஜீவனாம்சம் வாங்குவதற்குள்ள இவன போட்டுறங்க " என்று சொல்லி 1-ம் எதிரி மிரட்டியதால் எதிரிகள் மீது ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் கடந்த 25.10.2023-ம் தேதி கொடுத்த புகார் மனுவிற்கு காவல் அதிகாரிகளால் CSR.No.1033/2023-ல் மனு ரசீது வழங்கப்பட்ட நிலையில் மேற்படி எதிரிகள் மீது எவ்வித நடடிக்கையும் எடுக்கப்படவில்லை. எதிரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க ஆவன

செய்யக்கோரி விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு கடந்த 24.11.2023-ம் தேதி On-line மூலமாகவும், மறுநாள் 25.11.2023-ம் தேதி பதிவுத் தபால் மூலமாகவும் புகார் 25.10.2023-மனுக்கள் அனுப்பியதாகவும், ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காவல் துறையால் எதிரிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் புகார்தாரர் எதிரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி எதிர்மனுதாரருக்கு தகுந்த உத்தரவிடக்கோரி பிரிவு 156(3)Cr.P.C. படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவானது Cr.M.P.No.585/2024 என்று நம்பராகி விசாரணையில் உள்ளதாலும், மேற்படி புகார்தாரரின் புகார் மனுவில் தகுந்த முகாந்திரம் இருப்பதாகக் கருதி, உச்ச நீதிமன்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட (லலிதாகுமாரி - எதிர் - உத்தர பிரதேச மாநிலம்) உத்தரவை மேற்கோள் காட்டி எதிரிகள் மீது சம்பந்தப்பட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்தில் ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்யும்படியும், புகார்தாரர் தாவா மனுவின் முதல்கட்ட விசாரணைக்கு ஆஜராகவேண்டும் என்றும் நீதிமன்றத்தால் கடந்த 19.10.2024-ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(iv) மேற்படி நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னரும் எதிரிகளால் புகார்தாரருக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்கள் இருந்துவந்த நிலையில் வழக்கின் முக்கிய குற்றவாளிகளான 1-ம் எதிரி ஜெயமாதா மற்றும் 4-ம் எதிரி ஆஸ்பின் ஜாக் ஆகியோர்களின் பெயர்களை குற்ற இறுதி அறிக்கையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது சட்டத்திற்கும் நியாயத்திற்கும், நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கும் எதிரானதாகும் என்றும், மேலும் புகார்தாரர் சமூகம் நீதிமன்றத்தில் பிரிவு 156 (3)-ன்படி தாக்கல் செய்த மனுவில் புகார்தாரருக்கு எதிராக எதிரிகளின் சட்டவிரோத குற்றச் செய்கைகளுக்காக இதச பிரிவுகள் 120(b), 307, 109-ன் கீழ் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி அதன் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டப்பிரிவுகளுக்கு மாறாகவும் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராகவும், பிரிவுகள் 296(b), 351 (2) of BNS பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் புகார்தாரருக்கு எதிராக மேற்கொண்ட குற்ற நடவடிக்கைகளுக்கும் எதிரிகள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள குற்றப் பிரிவுகளுக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது (மேலும் தாவா வழக்கில் 4 ம் எதிரியிடம் இளம் வழக்கறிஞர்களாக பணிபுரிந்துவரும் தனவேல் -1, கிருபாகரராஜா-2 மற்றும் அருண் நேரு-3 ஆகிய மூவரும் சாட்சிகளாக

சேர்க்கப்பட்டுள்ளனர். தாவா புகார் மனுவை எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் புகார்தாரர் தரப்பில் கொடுக்கப்பட்டட பின்னர் புகார்தாரர் நீதிமன்ற வளாகத்தில் தனது பணி நிமித்தம் வந்திருந்தபோது மேற்படி 4-ம் எதிரியும் அவரது இளம் வழக்கறிஞர் அருண் நேரு என்பவரும் புகார்தாரரை தாக்க முற்பட்டனர். எனவே மேற்படி இருவர் மீதும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் ஷ 4-ம் எதிரி மீது மட்டும் குற்ற எண்.489/2023-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மேற்படி வழக்கானது சமூகம் நீதிமன்றத்தில் STC.No. 870/2024 ஆக தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் எதிரி சம்மனை பெற்றுக்கொள்ள மறுத்து வருவதால் வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி அருண் நேரு மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், மேற்கண்டவாறு எதிரிகளும் அவர்களது சாட்சிகளும் காவல் துறையில் செல்வாக்கு மிக்கவர்களகாக இருந்துவரும் நிலையில், 4-ம் எதிரியின் இளம் வழக்கறிஞர்களை தாவா வழக்கில் புகார்தாரருக்கு எதிரான சாட்சிகளாக சேர்க்கப்பட்டு நீதிமன்றத்தில் அளிக்கும் வாக்குமூலங்கள் புகார்தாரருக்கு எதிராகவே இருக்கும் என்பதால் மேற்படி சாட்சிகளை தாவா வழக்கில் சேர்த்திருப்பது புகார்தாரருக்கு எதிரான ஒருதலைப்பட்ச நடவடிக்கையாகும். இந்நிலையில் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் எதிரிகளுக்கு எதிராக மேற்படி குறைந்தபட்ச தண்டனை வழங்கப்படக்கூடிய சட்டப்பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையிலும் கூட மேற்படி இரண்டு எதிரிகளின் பெயர்களை நீக்குவதன் மூலம் இந்நிர் புகார்தாரரால் தாவா புகார் மனுவை மேல்நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

(v). மேலும் மேற்படி 1, 4 எதிரிகள் தாவா வழக்கிலிருந்து நீக்கப்படுவது சம்பந்தமாக புகார்தாரருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில் எவ்வித தகுந்த காரணங்களோ, முகாந்திரமோ தெரிவிக்கப்படவில்லை. மேற்படி 1, 4 எதிரிகள் இருவரும் தாவா வழக்கில் முக்கியமான தரப்பினர்கள் என்பதாலும் அவர்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் தகுந்த முகாந்திரம் இருப்பதாக நீதிமன்றம் ஏற்கனவே முடிவு செய்து உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் ஒருதலைபட்சமாக மேற்படி 1, 4 எதிரிகளின் பெயர்களை வழக்கிலிருந்து நீக்குவது தாவா வழக்கில் புகார்தாரரின் கட்சியை பலவீனப்படுத் தப்படுவதற்கு சமமாகும். எனவே மேற்படி 1, 4 எதிரிகளின் பெயர்களை குற்ற இறுதி அறிக்கையில் சேர்த்தும், எதிரிகள் தரப்பில் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள 1 முதல் 3

நபர்களின் பெயர்களை நீக்கரவு செய்தும் மேற்படி நான்கு எதிரிகள் மீதான குற்றச் செய்கைகளுக்கு எதிர்மனுதாரர் உரிய சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் 1 முதல் 4 எதிரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க தகுந்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிப்பதா?, வேண்டாமா? என்பதே தீர்வு செய்யவேண்டிய பிரச்சனையாகும்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. புகார்தாரர் / மனுதாரர் தனது மனுவில் மேற்படி 1 முதல் 4 எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 19.10.2024 அன்று Crmp.No.585/2024–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், ஆனால் மேற்படி நீதிமன்ற உத்தரவுக்கு பின்னரும் மேற்படி 1 முதல் 4 எதிரிகளிடமிருந்து புகார்தாரர்/மனுதாரருக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்கள் இருந்து வந்ததாகவும், மேற்படி உத்தரவு படி எதிரிகளுக்கு எதிராக எந்தவித சட்டப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், விசாரணையும் நடத்தப்படாமல் முக்கிய குற்றவாளிகளான ஜெயமாதா மற்றும் ஆஸ்பின்ஜேக் ஆகியோர்களை குற்ற இறுதி அறிக்கையிலிருந்து நீக்கம் செய்திருப்பதாகவும், தான் மேற்படி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 120b, 307, 109,–ன் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி மேற்படி மனுவை தாக்கல் செய்து அதில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், எதிரிகள் மீது 296(பி), 351(3)BNS–ன் கீழ் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் இவ்வழக்கின் சாட்சிகளாக குற்ற இறுதி அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தனவேல், கிருபாகரராஜா, மற்றும் அருண்நேரு ஆகிய மூவரும் மேற்படி ஆஸ்பின்ஜேக் என்பவரிடம் இளம் வழக்கறிஞர்களாக பணிபுரிந்து வருவதாகவும், அவர்களையே இவ்வழக்கின் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி எதிரிகளான ஜெயமாதா மற்றும் ஆஸ்பின்ஜேக் ஆகியோர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கப்படுவது சம்பந்தமாக தனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பில் தகுந்த காரணங்களோ, முகாந்திரங்களோ தெரிவிக்கப்பட வில்லை என்றும், அதனால் மேற்படி நபர்களையும் இவ்வழக்கில் சேர்த்து உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை தாக்க செய்ய உத்தரவிடுமாறு கோரி

மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. மேலும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையை ஆராய்கையிலும், மேற்படி சம்பவமானது இந்நீதிமன்ற வளாகத்திற்குள் நடந்ததுள்ளது புலப்படுகிறது. இருப்பினும் மேற்படி ஆஸ்பின்ஜேக் என்பவரிடம் இளம் வழக்கறிஞர்களாக பணிபுரிவதாக மனுதாரர்/புகார்தாரர் தனது ஆட்சேபணை மனுவில் கூறியுள்ள நபர்கள் மட்டும் தான் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்ற கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை. அதுமட்டுமின்றி மேற்படி இவ்வழக்கில் எதிரிகளாக குற்ற இறுதி அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ஜீவானந்தம் மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர்களுக்கு பிரிவு 35(3) BNSS–ன் கீழ் அறிவிப்பு அனுப்பட்டு அவர்கள் காவல் நிலையத்தில் ஆஜரானதாக கூறப்பட்டுள்ள அறிவிப்பிலும் எதிரிகள் காவல் நிலையத்தில் ஆஜராக வேண்டிய நேரம், நாள் போன்றவற்றை குறிப்பிடாமல் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமல் குற்ற இறுதி அறிக்கையுடன் இணைத்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனுதாரர்/புகார்தாரர் கூறியுள்ள சங்கதிகளை ஆராய்ந்ததிலிருந்தும், குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை ஆராய்ந்ததிலிருந்தும், மேற்படி குற்ற இறுதி அறிக்கையின் மீது மேல் விசாரணை செய்வதற்கு முகாந்திரம் உள்ளது என்பதால், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் முன்தீர்ப்பான Vinubhai Haribhai Malaviya Vs The State of Gujarat, 2019 என்ற வழக்கின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு, மனுதாரர் மனுவினை அனுமதித்து உத்தரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இவ்வழக்கினை சரிவர புலன்விசாரணை மேற்கொண்டு ஏற்கனவே குறிப்பிடப்பட்ட சாட்சிகள் தவிர மற்ற சாட்சிகளையும் விசாரணை செய்து புகார்தாரரின் புகாரின் மீது மேல்விசாரணை செய்து இறுதி அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்படுகிறது.

6. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர் இவ்வழக்கை ஏற்கனவே புலன் விசாரணை செய்த அதிகாரி அல்லாமல், மற்றொரு புலன் விசாரணை அதிகாரி மூலம் உரிய முறையில் புலன் விசாரணை மேற்கொண்டு, அறிக்கையை

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

7. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜீன் மாதம் 08ம் நாளாகிய இன்று அவையறிய பகரபட்டது.

-Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.